நித்திலக்குவியல்

டிசம்பர் - சனவரி—1976

குவியல் 14] [முத்து 9—10



ஆசிரியர்:

புலவர் கோ. வில்வபதி



மன்றம் வளர்த்த மாண்புறு தலைவர்
செந்தமிழ்த் தென்றல் சிவமுத்து அவர்களை
நெஞ்சில் நிறுத்தி நினைவைப் போற்றுவோம்.

மாணவர் மன்றம்
சென்னை. 1.



குவியல் 14	திருவள்ளுவர் ஆண்டு, 2006 ராட்சச, மார்கழி—தை டிசம்பர் 1975—சனவரி 1976	முத்து 9 — 0

தமிழ்நெறிக் காவலர் மயிலை சிவமுத்து
பிறந்த நாள் விழா

தைத் திங்கள் இரண்டாம் நாள் மன்றத்திற்கு நன்னுள்; பொன்னுள். தமிழும் தமிழ்நாடும் முன்னேறவும், தமிழ் இன வுணர்வு வளரவும் தம் வாழ்நாளெல்லாம் உழைத்த தமிழ் நெறிக்காவலர் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் பிறந்த நாள் தைத்திங்கள் இரண்டாம் நாள்.

மன்றத் தந்தையார் மயிலை சிவமுத்து அவர்களின் பிறந்த நாள் விழாவினை அவருடைய மணி விழா தொடங்கி ஒவ்வோ ராண்டும் மன்றம் சீரும் சிறப்புமாகக் கொண்டாடி வருகின்றது. அவர் வாழ்ந்த காலத்தில் மன்ற அன்பர்கள், அறிஞர்கள், தாய் மார்கள், மாணவர்கள் அனைவரும் கூடி, அவர் புகழ்பாடிச் சிறப்புக்கள்செய்து அவருடைய நல்வாழ்த்துக்களைப் பெறுவது வழக்கம். அவர் மறைவுக்குப் பின்னும் அவருடைய அடிச் சுவட்டைப் பின்பற்றி நாட்டுக்கு உழைத்து வரும் நம்மன்றம் அவர் நல்லுயிர் மன்றத்தைச் சூழ்ந்து நின்று நல்வழி காட்டுகின் றது என்ற உணர்வோடு அவர் நல்வாழ்த்தை விரும்பி ஆண்டு தோறும் இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிவருகிறது

இந்த ஆண்டு அவருடைய கனவுகள் பலவற்றில் ஒன்றை நனவாக்கிய - மன்றத்திற்கென ஒரு பெரிய கட்டடத்தை உரு வாக்கிய - பெருமித உணர்ச்சியுடன் மன்றக் கட்டடத் திறப்பு விழாவையும், அவருடைய சிலை திறப்பு விழாவையும் அவர் பிறந்தநாள் விழாவில் நடத்த முயன்றோம். இடையில் மன்றத் தேர்வுகள் குறுக்கிட்டமையாலும், விழாவில் கலந்துகொள்ள இருக்கும் பெருமக்களின் வசதியை எதிர்பார்த்தும் அவ்விழாக் களைச் சிறிது காலம் தாழ்த்து நடத்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட் டுள்ளது. ஆதலால், வழக்கம்போல் சுருங்கிய அளவில் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

பேராசிரியர் அவர்கள் தமிழன் தமிழனாக வாழவும், தமிழ் எல்லாத் துறைகளிலும் தனக்குரிய தகுதியைப்பெற்றுச் சிறக்கவும் தமிழர் உள்ளத்தில் தமிழுணர்வு அரும்ப வேண்டும் என்று பலவழிகளில் பாடுபட்டார். அவர் பூத்துவரும் இளைஞர் உள்ளத்தில் இளமையிலேயே அவ்வுணர்வினை விதைத்து விட்டால் அது காய்த்துக் கனிந்து பயன்தரும் என்ற நோக்கத்தோடு மன்றத்தின்மூலம் அரும்பெருந் தொண்டாற்றினர். அவர் நெறியைப் பின்பற்றித் தொடர்ந்து பணியாற்றும் மன்றத்திற்கு அவர் கலங்கரையாய் நின்று நல்லொளி காட்டுவார் என்ற நம்பிக்கையோடு மன்றச் சார்பில் எங்கள் வணக்கத்தை அவர்க்குக் காணிக்கையாக்குகிறோம்.

பிறந்தநாள் விழா நிகழ்ச்சி

மன்றத் தந்தை, தமிழ்நெறிக் காவலர், பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் பிறந்த தின விழா 16—1—1976 வெள்ளியன்று மாலை 6 மணி அளவில், மன்ற நிலையத்தில் சிறப்புறக் கொண்டாடப்பட்டது. மன்ற இணைச் செயலாளர் ப. கி. பொன்னுசாமி அவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றி, அக்கூட்டத்திற்கு மன்றத் தலைவரைத் தலைமை தாங்கி நடத்தித் தரக் கேட்டுக்கொண்டார். மன்றத் தலைவர் கோ. வில்வபதி அவர்கள் தம் தலைமை உரையில், மன்றத் தந்தையார் மாண்புகளை அழகுறத் தொகுத்துரைத்தார். அண்மையில் நிகழவிருக்கும் மன்ற விழாவினைக் குறிப்பிட்டுரைத்து, தமிழ் நெறிக்காவலரின் கனவுகள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டிய பெரும்பணிகள் பலவும் மன்றத்திற்கு இருப்பதைச் சுட்டிக் காட்டினர். பேராசிரியர் நெறிநின்று தமிழ்த் தொண்டாற்ற மன்றம் என்றும் தளராது என்றுரைத்தது அனைவர் உள்ளத்தையும் தொட்டது. அதனைத் தொடர்ந்து அழகுவேலனர் உணர்ச்சி உரையும், வல்லை. பாலசுப்பிரமணியம் அவர்கள் சுவையான பேச்சும் விழாவை அணி செய்தன. மற்றும் பேராசிரியர் அ. மாணிக்கம், கலைச்செல்வியார், புலவர் வீராசாமி, புலவர் தா. இராமலிங்கம், பூ. ச. சண்முகசுந்தரம் ஆகியோர் உரையாற்றினர். மன்றத் தந்தையார் மூத்த மகன் மயிலை சிவ. சண்முகசுந்தரம் தம் கவிதையைப் படித்தளித்தார். இறுதியில் உரையாற்றிய மன்றச்செயலாளர் தணிகை உலகநாதர், மன்றத் தந்தையாரின் நன்றி மறவாமை—எவரிடத்தும் அன்பொழுக நடந்த தன்மை ஆகியவற்றைத் தமக்கே உரிய இனிய நடையில் எடுத்துரைத்தார். மன்றச் செயலாளர் மி. ச. நடேசனர் அனைவர்க்கும் நன்றி நவில விழா விழுமிய முறையில் முடிவுற்றது.

விருதுபெற்ற நல்லாசிரியர்

சேயாறு தந்த செல்வம், சீர்திருத்தப் புலவர், செந்தமிழ்க் கவிஞர் மாவண்ணு தேவராசன், எம் ஏ. அவர்கள் 1973—74 ஆம் ஆண்டுக்கெனத் தமிழக அரசு வழங்கிய 'நல்லாசிரியர்' விருதுபெற்ற செய்தி அறிந்து மட்டிலா மகிழ்ச்சி கொள்கிறேம்.



வடார்க்காடு மாவட்டத்தில் தமிழ் மணக்கும் பேரூர் திருவோத்தூர். புலவர் தேவராசன் அவர்கள் அவ்வூர்ப் பெரியார் அண்ணுமலை முதலியாரின் நன்மகஞகப் பிறந்தவர். இளமையிலேயே தமிழார்வமும் சீர்திருத்த உள்ளமும் வாய்ந்தவராக விளங்கிய இவருக்குக் கவிபாடும் திறமை கருவிலே வாய்த்த திருவாக அமைந்திருந்தது. பள்ளிப் பருவத்திலேயே இவர் பாடிக் குவித்த கவிதைகள் பல. பெரியார் இராமசாமி அவர்களிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொண்ட நண்பர் தேவராசன் அவர்கள் அப்பருவத்திலேயே பெரியார்மீது பிள்ளைத் தமிழ் பாடிப் பாராட்டுக்குரிய கவிஞராக விளங்கினர். பின்னர்த் தம் முயற்சியால் தமிழ் கற்றுப் பெரும்புலமை பெற்றுப் புலவர் பட்டமும் பெற்ருர். இவருடைய ஒப்பற்ற தமிழ்த்தொண்டு செங்கற்பட்டு மாவட்டத்திற்குக் கிடைத்தது. செங்கற்பட்டு அரசினர் உயர் பள்ளிகள் பலவற்றில் தமிழாசிரியராய்ப் பணியாற்றி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியவர்களின் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரியவராய் விளங்கி வருகிருர்.

சிறந்த எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் வாய்ந்த பெருந்தகைப் புலவராகிய தேவராசன் அவர்கள் தம் தனிமுயற்சியால் எம்,ஏ., தேர்விலும் வெற்றி பெற்றுத் தமிழாசிரிய நண்பர்கட்கு வழிகாட்டியாய் விளங்கி வருவது பாராட்டுக்குரியதாகும்.

உழைப்பால் உயர்ந்த இவ்வுத்தமருடைய அறிவும் தொண்டும் தாய்த் தமிழ் வளரப் பெரிதும் பயன்பட்டு வருகின்றன. இத்தகைய தமிழ்ச் செல்வருக்குத் தமிழக அரசு நல்லாசிரியர் விருது வழங்கிச் சிறப்பித்தமை பாராட்டுக் குரிய ஒன்ருகும்.

மன்றத்தினிடத்தும், மன்றத் தந்தையார் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களிடத்தும், மன்ற அன்பர்களிடத்தும் பற்றும் பாசமும் கொண்ட நம புலவர் மேலும் பலப்பல உயர்வுகள் பெற்றுச் சிறக்க மன்றத்தின் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

கம்பன் கையாண்ட வஞ்சிப்பா இனம்

ம. ரா. பூபதி எம். ஏ.

(தலைமைத் தமிழ்ப் பேராசிரியர், தாகூர் கலைக்கல்லூரி. புதுச்சேரி)

முன்னுரை

வஞ்சிப்பாவினம் என்பவை, வஞ்சித்துறை, வஞ்சித் தாழிசை, வஞ்சி விருத்தம் என்பன. குறளடி நான்கு ஒரு பொருள் மேல் ஒரு செய்யுளாய் வருவது வஞ்சித்துறை. குறளடி நான்கு ஒரு பொருள்மேல் மூன்று செய்யுளாய் வருவது வஞ்சித்தாழிசை, சிந்தடி நான்காய் வருவது வஞ்சி விருத்தம் என்று யாப்பிலக்கண நூல்கள் கூறும்.

"குறளடி நான்மையின் கோவை மூன்ருய்
வருவன வஞ்சித் தாழிசை ; தனிவரின்
துறைஎன மொழிப துணிந்திசி னேரே" —யாப். 91

"சிந்த நான்காய் வருவது வஞ்சியது
எஞ்சா விருத்தம் என்மனர் புலவர்" —யாப். 92

இவற்றுள் வஞ்சித் தாழிசையையும், துறையையும் குறளடி விருத்தங்கள் என்றே கூறிவிடலாம். சீர் எண்ணிக்கை, ஒரு பொருள்மேல் வரும் செய்யுள் எண்ணிக்கை என்ற வேறுபாடுகளைத் தவிர, மற்ற எல்லா இயல்புகளிலும் இவை ஏனைய விருத்தங்களையே ஒத்துள்ளன. எனவேதான், விருத்தப்பாவால் காவியம் பாடிய புலவர்கள் பெரும்பாலோர் இவ் வஞ்சிப்பா இனங்களையும் தம் காவியங்களில் கையாண்டுள்ளனர்.

வஞ்சிப்பா எவ்வாறு இலக்கியத்தில் சிறு வரவினதோ, அதேபோல் வஞ்சிப்பா இனங்களும் இலக்கியங்களில் அருகியே காணப்படுகின்றன. அவற்றிலும் வஞ்சி விருத்தத்தை விட, வஞ்சித்துறை மிகவும் குறைவு ; வஞ்சித் தாழிசையோ மிகமிக அருகியே வருகின்றது.

கம்பன் தன் மாபெருங் காவியமாகிய இர்ராமாயணத்தில், வஞ்சித் தாழிசையைக் கையாளவே இல்லை. ஏனைய வஞ்சித் துறை, வஞ்சி விருத்தம் ஆகியவற்றையும் மிகக் குறைவாகவே கையாண்டுள்ளான்.

தொல்காப்பியம், "நாற்சீர்கொண்டது அடி எனப்படுமே" (செய். 31) என்று நாற்சீர் அடியையே சிறப்பித்துக் கூறுவதால் கம்பனும் தன் காவியத்தில் சுமார் 52% (10059க்கு 5164) கலி விருத்தங்களையே கையாண்டுள்ளான். எனவே, வஞ்சித்துறை

யும், விஞ்சி விருத்தமும் கம்பர் உள்ளத்தைக் கவர்ந்தவை எனக் கூறல் இயலாது. என்றாலும், தன் காலத்தைய கவிமரபினை ஒட்டித் தன் காவியத்தில் இவ்விரண்டையும் கையாண்டுள்ளான் எனக் கருதுதல் தக்கது.

இவற்றுள், வஞ்சித்துறையில் 14 பாடல்களையும், வஞ்சி விருத்தத்தில் 49 பாடல்களையும்—ஆக மொத்தம் வஞ்சிப்பா வினத்தில் 63 பாடல்களை மட்டும் பாடியுள்ளான். இனி இவற்றைத் தனித்தனியே காணலாம்.

வஞ்சித்துறை

கம்பன் வஞ்சித் துறைகளில் இரண்டு வகைகளையே இராமாயணத்தில் கையாண்டுள்ளான். அவை பின்வரும் வாய்பாட்டில் அமைந்தவை.

(1) ஒரு விளங்காய்—கூவிளம்
(2) கூவிளம்—தேமா.

அடிகளில் மிகச்சுருங்கிய குறள் அடிகள் நான்கு கொண்டது வஞ்சித்துறை யாகையால், நிகழ்ச்சிகளின் விரைவையும், விறுவிறுப்பையும் பாடுவதற்கு இவை மிகவும் பொருத்தமானவை.

1. ஒரு விளங்காய் கூவிளம்

கம்பன் பாடியுள்ள இருவகை வஞ்சித் துறைகளிலும் "ஒரு விளங்காய் கூவிளம்" என்ற வாய்பாட்டு வகை, கம்பனே முதன் முதலாகக் கண்டுபிடித்தது. இவ்வாய்பாட்டில் ஒரு வஞ்சித்துறையைக் கூடக் கம்பனுக்கு முன் வாழ்ந்த எந்தத் தமிழ்ப் புலவரும் பாடவில்லை. விருத்தப் பாக்களின் தந்தையாகிய இளங்கோ அடிகளோ, விருத்தப்பா வேந்தராகிய சம்பந்தரோ, மற்றும் அப்பரோ, சுந்தரரோ, ஆழ்வார்களோ, கம்பனுக்கு முன் வாழ்ந்த காவியக் கவிஞர்களோ இவ்வகை வஞ்சித்துறையைக் கையாளவில்லை. எனவே. இவ்வகை வஞ்சித்துறை தமிழ்க்காவிய உலகுக்குக் கம்பன் வழங்கிய கொடை ஆகும். கம்பன் 10 செய்யுட்களை இவ்வகை வஞ்சித் துறையில் பாடியுள்ளான்.

இவ் வஞ்சித்துறையானது வஞ்சி விருத்தமாகக் கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளது. வஞ்சி விருத்தமாகும் போது, அதன் வாய்பாடு,

"ஒருமா தேமா கூவிளம்"

என்றாகும். ஆனால், முதற்சீரான 'ஒருமா' என்பதில் ஈற்றசை எப்பொழுதும் குறிலாகவோ அல்லது வல்லொற்றுப் பின்தொட

ராத குறிலாகவோ இருப்பதால், இதனை "ஒரு விளங்காய் கூவிளம்" என்ற வாய்பாட்டில் அமைந்த வஞ்சித் துறையாகக் கொள்வதே மிகவும் பொருத்தமாகும்.

ஆரணிய காண்டத்தில், விராதன் வதைப்படலத்தில், விராதன் தன் வரலாற்றை இராமனுக்குச் சுருக்கமாகக் கூறும் நிகழ்ச்சியைப் பாடும்போது, கம்பன் இவ்வகை வஞ்சித் துறையைக் கையாளுகின்றான். எடுத்துக்காட்டுக்கு ஒரு பாட்டு.

"ஆடரம்பை நீடரங்
கூடுநின்று பாடலால்
ஊடுவந்து கூடவிக்
கூடுவந்து கூடினேன்"

விராதன் வதையுண்டபிறகு, அவன் முன்னை உருப்பெற்றுத் தன் பழைய வரலாற்றை உரைக்கையில், அது நீண்டால் பொருத்தமாக இராது எனக் கருதி, அதனை விரைவாகப் பாடி முடிக்கக் கம்பன் இவ்விடத்தில் இவ் வஞ்சித்துறையைக் கையாண்டுள்ளதுபோல் தோன்றுகின்றது.

2. கூவிளம் தேமா

கம்பன் கையாண்டுள்ள மற்றொரு வஞ்சித்துறையான "கூவிளம் தேமா" என்ற வாய்பாட்டில் அமைந்தது, கம்பன் கண்டுபிடித்ததன்று. இவ்வகை வஞ்சித்துறையை முதல்முதலாகக் கண்டு பாடிய பெருமை நம்மாழ்வாருக்கே உண்டு. நம்மாழ்வார் காலத்துக்கு முற்பட்ட எந்தப் புலவரும் இவ்வஞ்சித் துறையில் பாடவில்லை. நம்மாழ்வார் 4 பாசுரங்களைத் தம் திருவாய் மொழியில் இவ்வகை வஞ்சித்துறையில் அமைத்துள்ளார்* எடுத்துக்காட்டுக்கு ஒருபாட்டு.

"வையகம் வெண்ணெய்
கைகலந் துண்டான்
பொய்கல வாதென்
மெய்கலந் தானே"

நம்மாழ்வாருக்குப் பிறகு, கம்பன் காலம்வரை இவ்வஞ்சித் துறையை எவரும் கையாளவில்லை. கம்பன்தான் மீண்டும் இவ் வகைக்குப் புத்துயிர் அளித்துச் சுந்தர காண்டத்தில், இலங்கை எரியூட்டு படலத்தில் 4 செய்யுட்களைப் பாடியுள்ளான்.

அனுமன் இலங்கையை எரியூட்டி அழிக்கும் செய்தியை அரக்கர் இராவணனுக்குத் தெரிவிக்க, இராவணன் சினங்

* திருவாய்மொழி 1 : 2. 769 ; 1 : 8 : 5, 1..

கொண்டு அக்குரங்கைக் கொண்டுவருக எனக்கட்டளை இடுகின்ற நிகழ்ச்சியையும், வீரர் விரைதலையும் இவ்வகை வஞ்சித் துறையில் கம்பன் பாடுகின்றான்.

"உண்டநெ ருப்பைக்
கண்டனர் பற்றிக்
கொண்டணை கென்றான்
அண்டரை வென்றான்"

"உற்றக லாமுன்
செற்றகு ரங்கைப்
பற்றுமின் என்றான்
முற்றமு னிந்தான்"

"சார்அயல் நின்றார்
வீரர்வி ரைந்தார்
நேருதும் என்றார்
தேரினர் சென்றார்"

"எல்லைஇ கந்தார்
வில்லர்வெ குண்டார்
பல்லதி காரத்
தொல்லர் தொடர்ந்தார்"

—சுந்தர. இலங்கை எரியூட்டு. 41—44

வஞ்சி விருத்தம்

வஞ்சி விருத்தங்களில் கம்பன் 4 வகைகளைக் கையாண்டுள்ளான். இவற்றுள் மாச்சீர் முதல் வஞ்சி விருத்தங்கள் 3. அவற்றின் வாய்பாடுகள் வருமாறு:

(1) ஒருமா தேமா கூவிளம்
(2) ஒருமா கூவிளம் தேமாங்காய்
(3) ஒருமா கூவிளம் கூவிளம்.

விளச்சீர் முதல் வஞ்சி விருத்தம் நன்று. அதன் வாய்பாடு, "கூவிளம் கூவிளம் தேமா" என்பது.

கம்பன் கையாண்டுள்ள வேறு மூன்றுவகையான செய்யுட்கள், வஞ்சி விருத்தமாகவும், கலி விருத்தமாகவும் கொள்ளும்படி அமைந்துள்ளன. அவை வருமாறு :

(1) "ஒருவிளம் ஒருவிளம் ஒருவிளங்கனி" என்ற வாய்பாட்டு வஞ்சி விருத்தம். இதனை, "ஒருவிளம் ஒருவிளம் ஒருமா கூவிளம்" என்ற வாய்பாட்டுக் கலிவிருத்தமாகக் கொள்ளலாம்.

(2) "ஒரு மாங்கனி கூவிளம் கூவிளங்காய்" என்ற வாய்பாட்டு வஞ்சி விருத்தம். இதனை, "ஒருமா புளிமா புளிமா புளிமா" என்ற வாய்பாட்டுக் கலிவிருத்தமாகக் கொள்ளலாம்.

(3) "ஒருவிளங்கனி கூவிளம் கூவிளம்" என்ற வாய்பாட்டு வஞ்சி விருத்தம். இதனை, "ஒருமா கூவிளம் கூவிளம் கூவிளம்" என்ற வாய்பாட்டுக் கலிவிருத்தமாகக் கொள்ளலாம்.

இம் மூன்றையும், கலிவிருத்தமாகக் கருதுவதே மிகவும் பொருத்தம் என்பதால், இக் கட்டுரையில் இவை ஆராயப்பெற வில்லை.

ஏனைய நான்கு வகை வஞ்சி விருத்தங்களையும் இங்குக் காணலாம்.

(1) ஒருமா தேமா கூவிளம்

இவ் வஞ்சி விருத்தத்தை முதல்முதலாகத் தமிழில் கையாண்டவர் சூளாமணி பாடிய தோலாமொழித் தேவரே ஆவார். சூளாமணி (9) அரசியற் படலத்தில், போர் நிகழ்ச்சியைப் பாட இவ் வஞ்சி விருத்தத்தில் 12 செய்யுட்களை அவர் யாத்துள்ளார். எடுத்துக் காட்டுக்கு ஒருபாடல்.

> "திரிவில் சாரி கைச்செயல்
> புரவி சேர்ந்து பொங்கின
> வரிவில் வாளி மன்னரும்
> மருவு போர்ம யங்கினர்" —237

சிந்தாமணியில் திருத்தக்க தேவர் கையாண்டுள்ள ஒரே வகை வஞ்சி விருத்தம், இந்த வாய்பாட்டில் அமைந்ததே. (3) காந்தருவ தத்தையார் இலம்பகத்தில் 16 செய்யுட்களைத் தேவர் இவ்வகை யாப்பில் பாடியுள்ளார்.

ஸ்ரீ தத்தன் என்ற வணிகனுடைய கலத்தைக் கடலில் கவிழ்ந்தாற்போல் தோன்றும்படி செய்தமைக்குரிய காரணத்தைத் "தரன்" என்ற விஞ்சையர் மகன் விளக்கி உரைக்கையில், இவ் வஞ்சி விருத்தத்தைத் திருத்தக்கதேவர் கையாளுகின்றார். எடுத்துக் காட்டு:

> "துன்ப முற்ற வர்க்கலால்
> இன்ப மில்லை யாதலின்
> அன்ப மற்று யான்நினைத்
> துன்பத் தால்தொ டக்கினேன்" —3 : 87

கம்பன் இவ்விருத்தத்தை ஆரணிய காண்டத்தில், விராதன் வதைப் படலத்தில் (61—70) 10 செய்யுட்களில் கையாண்டுள்ளான். ஆனால், முன்னரே கூறியபடி, இவற்றை "ஒருவிளங்

காய் கூவிளம்'' என்ற வாய்பாடு வஞ்சித்துறையாகக் கொள் வதே மேலானது.

(2) ஒருமா கூவிளம் தேமாங்காய்

இவ் வாய்பாட்டு வஞ்சி விருத்தம் கம்பனே முதன் முதலாகக் கண்டுபிடித்துப் பாடியதாகும். சுந்தரகாண்டத்தில், சூடாமணிப் படலத்தில், 14 பாடலை இவ் வஞ்சிவிருத்தத்தில் கம்பன் பாடியுள்ளான். இராவணனால் அசோக வனத்தில் சிறை வைக்கப்பட்டு, மனம் நொந்த நிலையில் இருக்கும் சீதையை அனுமன் தேற்றுகின்ற நிகழ்ச்சியைப் பாடக் கம்பன் இந்த யாப்பைக் கையாளுகின்றான். எடுத்துக் காட்டு :

''நல்லோய் நின்னை நலிந்தோரைக்
கொல்லோம் எம்உயிர் கொண்டங்கே
எல்லோ மும்செல எங்கோனும்
வில்லோ டும்செல வேண்டாவோ'' —சூடா. 42

வீரத்தையும், பெருமிதத்தையும் பாடுவதற்கு இவ்வகை வஞ்சி விருத்தம் ஏற்றது என்பது கம்பன் கருத்தென்று இப் பகுதியிலிருந்து புலனாகின்றது.

(3) ஒருமா கூவிளம் கூவிளம்

இவ்வகை வஞ்சி விருத்தத்தை முதலில் கண்டு பயன்படுத்தியவர் தோலா மொழித் தேவரே ஆவார். சூளாமணியில், 3 படலங்களில் 19 பாடல்களை அவர் இவ் வஞ்சி விருத்தத்தில் பாடியுள்ளார். வீரத்தைப் பாடவே அவர் பயன்படுத்துகின்றார்.

''வாளர் வார்கழல் விக்கிய
தாளர் தாம்உடைந் தோடினல்
நாளை நாண்உடை நங்கைமார்
தோளை நாண்இலர் தோய்வதே?''
—(9) அரசியற் சருக். 225

அடுத்து, பெரிய புராணத்தில், சேக்கிழார், புகழ்ச் சோழ நாயனார் புராணத்தில், 4 செய்யுளை இவ் வஞ்சி விருத்தத்தில் அமைத்துள்ளார். அவரும் போர் நிகழ்ச்சியையே பாடுகின்றார். எடுத்துக் காட்டு :

''மண்டு போரின்ம லைப்பவர்
துண்ட மாயிட உற்றெதிர்
கண்ட ராவி கழித்தனர்
உண்ட சோறுக ழிக்கவே''

கம்பன் யுத்த காண்டத்தில், கும்பகருணன் வதைப் படலத்தில், 11 பாடலை (111—121) இவ்வஞ்சி விருத்தத்தில் பாடியுள்ளான். கும்பகருணனுடைய நற்பண்புகளையும், விரத்தையும் வீடணன் இராமனுக்கு எடுத்துக் கூறும் நிகழ்ச்சியைக் கம்பன் இவ் விருத்தத்தில் பாடுகின்றான். எடுத்துக் காட்டு :

" ஆழி யாய்இவன் ஆகுவாள்
ஏழை வாழ்வுடை எம்முனேன்
தாழ்வி லாஒரு தம்பியோன்
ஊழி நாளும்உ றங்குவான் "

—கும்ப. வதை —117

(4) கூவிளம் கூவிளம் தேமா

இவ்வகை வஞ்சி விருத்தத்தை முதலில் கண்டவன் கம்பனே. சுந்தரகாண்டத்தில், இலங்கை எரியூட்டு படலத்தில், 14 பாடலை (45—58) இவ் விருத்தத்தில் பாடியுள்ளான். இராவணன் கட்டளைப்படி அனுமனைப் பற்றிக்கொண்டு போகவந்த அரக்கர்க்கும், அனுமனுக்கும் நடந்த போரை விவரிக்கவே இவ்வஞ்சி விருத்தம் கையாளப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டு :

" பற்றுதிர் பற்றுதிர் என்பார் ;
எற்றுதிர் எற்றுதிர் என்பார் ;
முற்றினர் முற்றுமு னிந்தார் ;
கற்றுணர் மாருதி கண்டான் "

இதுவரை ஆய்ந்தவற்றால், பின்வரும் நான்கு முடிவுகட்கு வருகிறோம்.

(1) கம்பன் தன் இராமாயணத்தில் வஞ்சிப்பா இனங்களை மிகக் குறைவாகவே கையாண்டுள்ளான். (63) பாடல்.

(2) வஞ்சிப்பாவினங்களில், வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம் ஆகியவற்றைமட்டுமே கம்பன் கையாண்டுள்ளான் ; வஞ்சித் தாழிசையைக் கையாளவில்லை.

(3) "ஒருவிளங்காய் கூவிளம்" என்ற வாய்பாட்டு வஞ்சித் துறையையும், "ஒருமா கூவிளம் தேமாங்காய்", "கூவிளம் கூவிளம் தேமா" என்ற வாய்பாடுகளை உடைய இரு வகை வஞ்சி விருத்தங்களையும் கம்பனே முதல் முதலாகக் கையாண்டுள்ளான்.

(4) வஞ்சிப் பாவினங்கள் பொதுவாக, விரைவு, விறுவிறுப்பு, போர், பரபரப்பு ஆகியவற்றைப் பாடவே பயன்படுத்தப் பட்டுள்ளன.

முதற் பரிசு பெற்ற கட்டுரை :

'கல்வித்துறையில் வேண்டும் சீர்திருத்தங்கள்'

முருக. சுதர்சன்,

(பட்ட வகுப்பு, தாகூர் கலைக் கல்லூரி, புதுச்சேரி – 8)

"இளைஞர்களே (மாணவர்களே) எதிர்காலப் பிரதமர்கள், அமைச்சர்கள், விஞ்ஞானிகள், சான்றோர்கள்." என நேரு அவர்களும், "மாணவர்கள், சமுதாயச் சிற்பிகள்!" என அறிஞர் அண்ணா அவர்களும் கூறியுள்ளனர். அவர் தம் கூற்று உண்மையாயின், உலகம் உயர்நெறியில் நின்றொழுக வேண்டுமாயின், அவர்களை நெறிப்படுத்தும் கல்வித்துறை செம்மை நிலையில் இருத்தல் அவசியமே. அத்தகு துறை இன்று முழுச் சீருடன் இல்லை யென்பதைத் தலைப்பே தெள்ளத் தெளியச் சுட்டுகிறது.

"ஒருமையுள் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

என முழுமை பெற்ற கல்வி நலனைக் கூறுகிறார் வள்ளுவர். இன்றைய கல்வியோ ஒருமைக்கே உதவா நிலையில் உள்ளது.

கல்வித்துறையில் சீர்திருத்தம் செய்யுங்கால், பாடத்திட்டம், கல்வி நோக்கம், கற்கும் முறை, தேர்வுமுறை முதலியவற்றையும் இதர சூழல்களையும் நோக்கிய பின்பே செய்தல் வேண்டும். இவை நடவாதவரை அரசியலார் கல்விக்காகச் செலவிடும் செல்வம் 'விழலுக் கிறைத்த நீ(ர்)'ராகவே மாறு மென்பதில் ஐயமில்லை.

பாடத் திட்டம் :

'திட்டமில்லாச் செயல் வட்டம் பெறாது.' என்பதற்காகப் பாடத்திட்டம் வகுக்கப்பட்டால் போதாது. திட்டம் சீரியதாகவும் இருத்தல் வேண்டும். தேர்வு நோக்கத்துடன் தீட்டப்படும் பாடத்திட்டம் ஆசிரியர்களையும் மாணவர்களையும் இயந்திரமாக மாற்றிவிடுகிறது. பாடத்திட்டம் மாணவரைக் கவருமாறு இடையிடையே பொழுதுபோக்குக் கல்வியுடன் அமைவதில்லை. இதனால் மாணவர் பாடத்தில் சலிப்படைகின்றனர். மாணவர்கள் கவனிக்காதபோது ஆசிரியர்களின் தூயபணி குறிப்பிட்ட அளவு பாடத்திட்டத்தை முடிப்பதாகவே மாறுகிறது. மாணவர் மனனம் செய்கின்றனர். அவர்கள் ஆண்டு முழுவதும் உழைக்கவேண்டிய அவசியம் இல்லை. தேர்வுக் காலத்தில் இரவு பகலாக உழைத்தால் போதும் என்கிற நிலை உருவாகிறது.

'சோம்பிய உள்ளம் பிசாசின் உறைவிடம்.' வாலிபப் பருவத்தினராகிய மாணவரால் சோம்பி இருக்க முடியவில்லை;

வகுப்பைவிட்டு வெளியில் சுற்றுவதில் நாட்டம் கொள்கின்றனர். அவர்கள் உற்றவேலை ஒன்றின்றி ஊர்ப்பேச்சிலும் உதவாக்கரைப் போராட்டத்திலும் ஈடுபாடு கொள்ளும் முறையில் பாடத்திட்டம் உள்ளது.

இதனைக் கல்வித்துறையிலேயே இருந்து ஊறிய, காலம் சென்ற டாக்டர் மு. வ. அவர்கள், "இக்காலக் கல்விமுறை மாணவரை மனப்பாட இயந்திரமாக்குகிறது; மனப்பாடம் செய்து தேர்வு எழுதியவுடன் கல்வி முடிந்துவிடுகிறது: மாணவரது உண்மை அறிவுக்கு எவ்விதத் தூண்டு சக்தியும் இல்லை. இதனால் மாணவர் தம் உண்மையறிவைத் தூண்டும் துடிப்புள்ள பல திறமைகள் வீணான, முரணான வழிகளில் செலவழிகின்றன." என்று கூறுவது நோக்கத்தக்கது.

அண்மையில் இலண்டன் பல்கலைக் கழகங்களும் இக்கருத்தையே ஆராய்ந்து "கல்வித்திட்டங்கள் காலச் சூழலுக்கு ஏற்ப மாற்றப்படல் வேண்டும்" எனத் தீர்மானித்துள்ளன.

எனவே கல்வித்திட்டத்தை, மனப்பாடத்தை ஒழித்து மாணவர்தம் உண்மையறிவு தூண்டப்படும் விதத்தில் திருத்தி அமைக்கவேண்டும்.

கல்வி நோக்கம் :

'கல்வி வாழ்வை உயர்த்தும், அறிவைப் பெருக்கும்' என்னும் உண்மைநோக்கம் குலைந்து வேலைக்காக என்று மாறுவதால் கல்வித்துறையில் நம்பிக்கையின்மை குடிகொள்கிறது. இக்காலக் கல்வியின் நோக்கம் பட்டம் பெறுதலே. 'பெறும் பட்டம் வேலைக்கு வழிவகுக்குமா வகுக்காதா? என்ற ஐயம் தலைதூக்குகிறது.

ஆகமொத்தம் கல்வி ஏணியாகப் பாவிக்கப்படுகிறது; இலக்கை அடைந்ததும் ஒதுக்கப்படுகிறது, அங்கும் நெருக்கடி உண்டாகும்போது மாணவரிடையே பதட்டமும் குழப்பமும் மிகுகின்றன. எதையும் செம்மையுடன் செய்ய வழியில்லை.

வேலைவாய்ப்பில் திறமைமட்டும் மதிக்கப்படுதல் வேண்டும். மனப்பாட மதிப்பெண்களுக்கும் சிபாரிசுகளுக்கும் மதிப்பளிக்கும் வழக்கம் மண்ணோடு மண்ணாகுமானால், கல்வி கல்வி நோக்குடன் பயிலப்படும். இன்றேல் வேலைவாய்ப்பு அடிப்படையில் கல்வியில் தனிப்பிரிவு வேண்டும்.

கற்கும் முறை :

மாணவரின் எண்ணிக்கைப் பெருக்கத்தாலும், மணியடித்தால் இயந்திரமாக இயங்குவதாலும் ஆசிரியருக்கும் மாணவருக்கும் நெருங்கிய தொடர்பில்லை. மனப்பாடத்தையும், துணை நூல்களையும் (Guides) நம்புவதால் ஆசிரியருக்கு அடங்கி

இருந்து, அவர் கூறும் வழியில் பாடங் கேட்கும் அவசியம், வழக்கம் மாணவருக்கு இல்லை.

அக்காலக் குருகுலத்தில் நற் குருவிடம் கல்வி கற்ற சீடன் உலகு போற்ற உயர் வாழ்வு வாழ்ந்தான். (வசிட்டர்—அரிச்சந்திரன்; துரோணர்—அருச்சுனன்). இக்காலத்திலோ மாணவர் உளநிலை அறிந்து, ஆற்றலுணர்ந்து, குறை அறிந்து கற்பிக்க ஆசிரியர்களுக்குப் போதிய வாய்ப்பு இல்லை. வகுப்பறைகள் பொதுமேடைகளை விட மோசமடைந்து வருகின்றன.

இக்காலத்தில் இது முழுமையும் சாத்யமன்று ஆயினும் நன்மாணுக்கரை, கல்வியில் ஆர்வமுள்ளவரைத் தேர்ந்தெடுத்து, சிறப்புப் பாடங்கள் வழியாகப் பகுத்து, எண்ணிக்கையைக் குறைத்து அல்லது ஆசிரியரை மிகுவித்து ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் சிறிதளவாவது தொடர்பு உண்டாக்க வேண்டும். ஆசிரியர்கள் தூண்டுகோல்களாயிருந்து மாணவரின் ஐயத்தை நீக்கி, அவர்களைச் சொந்த முயற்சியால் நூல்களைப் புரிந்துகொள்ளப் பழக்கவேண்டும் மேலை மாணவர்களைப் போல்.

இக்காலக் கற்கும் முறையில் மாணவரிடையில் காணப்படும் தனித்தன்மைகளை வளர்த்துக்கொள்ள வாய்ப்புகள் இல்லை. இசை, நடிப்பு, ஓவியம், சிற்பம், நடனம், விளையாட்டு என அவரவர் பெற்றுள்ள தனித்தன்மைகளை ஓய்வு நேரங்களில் வளர்த்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். இதனால் வெற்றுப் பேச்சுக்கோ, வீண்குழப்பங்களுக்கோ இடமிருக்காது.

ஆற்றலும் திறமையும் உள்ளவர்களை நூல் நிலையம், விஞ்ஞான ஆய்வுக்கூடம், விவாத அரங்கம், விளையாட்டரங்கம், காட்சி அரங்கம், இசை அரங்கம் ஆகியவை அமைத்து ஈடுபடுத்தினால் அரசியல் போராட்டங்களில் ஈடுபட அவர்களுக்குக் காலமே இராது.

இத்தகு கற்கும் முறையால் உயிரினும் ஓம்பப்படும், விழுப்பந்தரும் ஒழுக்கம் தானே மாணவர்களிடம் அமையும்.

தேர்வு முறை :

இக்காலத்தில் மனப்பாட சக்தி இருந்தால்தான் சிறந்த மதிப்பெண்கள் பெறமுடியும் என்ற மனப்பான்மை வளர்ந்து வருகிறது. வகுப்பில் நன்றாகப் படிப்பவர்கள், பாடப்பகுதி மட்டுமன்றி அகன்ற, ஆழ்ந்த பொது அறிவு பெற்றவர்கள், போன்றோர் குறைந்த மதிப்பெண்களே பெறுவதாலும் இக்கருத்து வலுவடைகிறது.

உருப் போட்ட வெறும் கருத்துக்களை எழுதுவதால் தேர்வு உண்டு எனும் போக்கு மாறவேண்டும். பாடத்தைச் சிறப்பா

கப் புரிந்துகொண்டது உண்டா? என்பதைக் காணவேண்டும். கல்வித்தரம், எழுத்துத் தரம், ஒழுக்கத்தரம், பிற ஆற்றல்களின் தரம், உழைப்புத்தரம், எல்லாம் கண்டு தேர்வு தரப்படவேண்டும்.

மதிப்பெண்களைப் பகுத்து ஒரு பகுதி மதிப்பெண்களைத் தேர்வுத்தாள் வழியே மாணவரின் உண்மைப் புலமையை எடைபோடும் வகையிலும், மறுபகுதி மதிப்பெண்கள் ஆசிரியர் வழியே ஒழுக்கத்தையும், நேரடி கல்வித்திறனையும் மதிப்பிடும் வகையிலும் வழங்கவேண்டும்.

தேர்வு இவ்வாறு அமையுமானல் மாணவர் நோக்கிலும் போக்கிலும் பெரும் மாற்றம் காண இயலும்.

தொழிற் கல்வி :

நூற் கல்விமட்டும் பெருகி, தொழிற்கல்வி உடன் பெருகாத ஒரு தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என்பர். இன்று ஏட்டுக் கல்வி கற்றோர் யாவரும் கணக்கர்களாக, எழுத்தர்களாக, ஆசிரியர்களாக அலுவலகங்களில் அமர்ந்து பணிபுரியவே விரும்புகின்றனர். உற்பத்தித்துறையில் ஆற்றல் வாய்ந்தவர்களாக, விருப்பம் உள்ளவர்களாக அவர்களை மாற்றும் வகையில் கல்வித்துறை சீர்பெறவேண்டும். கல்விப்பருவம் முடிந்ததும் 'தன் கையே தனக்குதவி' என்பதுபோல் தாங்களே தொழில் தொடங்கும் வண்ணம் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும். இது கல்வித்துறையில் நம்பிக்கையை, ஊக்கத்தை, திறமையைப் பெருக்குவதோடு நாட்டு நலனுக்கும் உறுதுணை புரியும்.

சமுதாயச் சூழல் :

கல்வித் துறையின் சீர்கேட்டிற்குச் சமுதாயச் சூழலும் காரணமாகிறது. சமுதாய மாந்தரின் தொகுதியே கல்வித்துறையை இயக்குகிறது; அதன் உயர்வும் தாழ்வும் சமுதாயத்தின் கரங்களில்தான் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது.

விடுதலைக்கு முன்பு அரசியல் தலைவர்கள் போராட்டங்களில் பங்குபெறுமாறு மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தனர். விடுதலை பெற்ற பின்பும் அவ் அழைப்பு நின்றபாடில்லை. மாணவர்களுக்குச் சற்றும் தேவையில்லாத விவசாயப் போராட்டம், தொழிலாளர் போராட்டம், அரசியற் போராட்டம் முதலியவற்றில் மாணவர் பங்குபெறுவது கண்கூடு. தொழிலாளர் போன்றோர் தங்களது குறைகளை வன்முறையால் போக்க முயலும்போது, மாணவரும் அவ்வழியிலேயே செயல்படுகின்றனர்.

சமுதாயக் குழப்பம் விளைவிக்க விரும்பும் சமூக விரோதிகள் சிலர் எளிதிற்கிளர்ந்தெழும் மாணவர் உணர்வுகளைத் தூண்டி வன்முறைக்கு வழிவகுக்கின்றனர். மாணவர்கள் முன் நிற்ப தால் நாட்டு நலனில் நாட்டங்கொண்ட நல்லோர் பலர் மனம் தளர்கின்றனர்; நடுக்குறுகின்றனர்.

இதனையே தீர்மானமாகக் கருதிச் சிலர், "செல்வாக்கு மாணவர் கைக்குச் சென்றுவிட்டது" எனக் கூறி மாணவரைத் தூண்டி கல்வித் துறைக்குச் சீர்கேட்டைச் சேர்க்கின்றனர். அது முற்றிலும் உண்மையன்று. எண்ணிக்கைப் பெருக்கம் காரணமாகவும் நாடெங்கும் பரந்துள்ளமையாலும் அவர்கள் தங்கள் எண்ணங்களை ஆற்றலுடன் வன்மையாக, விரைந்து அறிவிக்கின்றனர்.

உண்மையில் 'மாணவர் இனம்' என்று தனி இனம் இல்லை. பெற்றோர்க்குப் பிள்ளைகளாய் உள்ளவர்களே கல்வி காரண மாக ஒன்று கூடும்போது 'மாணவச் சமுதாய'மாய் மாற்றம் பெறுகின்றனர். எனவே, மாணவரின் பாதிப்பு ஊர்தோறும், வீதிதோறும், வீடுதோறுமுள்ள பெற்றோரையும் பாதிக்கிறது.

பெற்றோர் அவ்வாறன்றித் தம் பிள்ளைகளின் 'மாணவப் பருவம் படிப்பதற்காக மட்டுமே அமையவேண்டும்' என் பதை உணர்ந்து அவர்களைத் திருத்தினால் நன்மைகள் பல விளையும். இச் சமுதாயத்திருத்தம் கல்வித்துறைக்குச் செம்மை சேர்க்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

கல்வித் துறையும் முற் கூறியதுபோல் மாணவர்களின் ஆர் வங்களுக்கேற்பப் பொழுது போக்குக் கல்விகளான இசை, நட னம், ஓவியம், சிற்பம், விவாத மன்றம், விஞ்ஞானக் கூடம் முதலியன அமைத்து அவர்களைக் கவர்தல் வேண்டும்; சமு தாயப் போராட்டங்களிலிருந்து விடுவிக்கவேண்டும்.

இவைமட்டுமன்றி மாணவரைத் தேர்ந்தெடுப்பது முதல் நல் சான்றோராய் மாற்றுவதுவரை பல வழிகளிலும் செம்மை யான சீர்திருத்தம் பெற்றால், 'கல்வி' இன்றைய வாழ்வுச் சிக் கலைத் தீர்ப்பதற்கு வேலையெனும் பதவி எய்துதற்குரிய ஏணி என்பது மாறி "அறவழியில் பொருள் சேர்த்து அதனால் வரும் இன்பம் துய்த்து இம்மை கடந்து மறுமை வாழ்வை அடையும் தோணி"யாகும் என்பதில் ஐயமில்லை. நம் மூதாதையர் கருத்தும் நிறைவேறும்.

"அறம்பொருள் இன்பம்வீ டடைதல்நூற் பயனே"

—நன்னூல்.

முதற் பரிசு பெற்ற கவிதை :

வேனிற்கால வருணனை

S. தங்கவேலு,
(இளமறிவியல் கணிதம் முதலாண்டு)
கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர், சேலம்.

கோங்கொடு புன்னை குரவமும் மலரக்
குறிஞ்சி மென்முகை நறுஞ்சிறை விரிப்பப்
பாசிளங் காந்தளின் வீசெரி மூளப்
பொன்னி னன்ன புகலருங் கொன்றை
போதவிழ்ந் தலரத் தாதவிழ்ந் தொழுகு
மடற்பூந் தாழை மணஞ்சே ணோங்கக்
கடற்பூ நெய்தல் கண்கொடு நோக்க
வண்டிமிர் கஞ்சந் தண்டொடு நிமிரத்
தளவ மென்னகை தயங்கக் கிளர்நிறத்
திரும்பின் அன்ன சிறைபடு சுரும்பும்
பொறிபடு ஞிமிறும் வரியுடல் அளியும்
தேனும் பலவாச் சிறைவிரித் தாயக்
கார்க்களிற் றெழுகு கடமே போல
வேறுபடு சுவையின் நாறுகொள் பிரசம்
பூவின் றிழியப் புங்கின் இளந்தளிர்
சூத மென்றளிர் சுணங்கொடு தழையக்
காதன் மிகுங்கவி கடுங்கண் மந்தி
நாவிற் சுவைதரு நறவம் கொணர்கெனத்
தேனடை கொள்ளச் செம்மாந் தேகும்
வேனிற் பருவத்து விந்தை
கூறக் கூறக் கூறு ஞவே!

முதற் பரிசு பெற்ற கதை :

கன்றும் உதவும் கனி

செல்வி. பி. கமலம்
(மூன்றுமாண்டு வரலாறு)
அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கல்லூரி, பழனி.

தன்னை மறந்து 'ஜேன் அயரில்' மூழ்கி யிருந்த பாதர் ஜேம்ஸ் 'எலக்டிரிக் பெல்லின்' ஒலி கேட்டு சுய நினைவை அடைந்தார். மூன்றும் முறையாக ஜேனின் உணர்வோடு தானும் கலந்து நின்ற நிலையிலிருந்து வலுக்கட்டாயமாக விடு பட்டு மனமின்றிப் புத்தகத்தை செல்ஃபில் வைத்தார் பாதர். டைரியை புரட்டியவர், 'ஓ தேர்ட் பி. ஏ 'பி' செக்ஷன்' என்ற வாறு வேண்டிய புத்தகத்தை எடுத்துக்கொண்டு முதல் மாடி யில இருந்த மூன்றுமாண்டு இலக்கிய பட்ட வகுப்பை நோக்கி நடந்தார்.

எதிரில் வந்த மாணவர்கள் 'விஷ்' செய்தபோது மென்மை யாகத் தலையசைத்து அதை ஏற்றுக்கொண்டு நடந்தார். மாடி யின் வளைவில் திரும்பியவர் எதிரே மாடியிலிருந்து மிஸ் தங்கம் இறங்கி வருவதைப் பார்த்தார். குனிந்த தலையோடு மென்மை யாக மலர் ஒன்று அசைந்து வருவதைப்போல் இறங்கி வந்து கொண்டிருந்த தங்கத்தைப் பார்த்தபோது பாதரின் உள்ளத்தி லும் கண்களிலும் கனிவு ததும்பியது. அன்போடு அவளைப் பார்த்தவாறே ஏறினர். அருகில் வந்ததும் 'குட் மார்னிங் பாஃ தர்' என்ற தங்கத்தை 'அவளுக்கென்றே தயாராக நினைத்து வைத்திருந்த அருள் நிறைந்த அழகு புன்முறுவலை உதிர்த்த வாறே 'எஸ். குட் மார்னிங்' என்றவாறே கடந்து சென்றார்.

மாடியின் முகப்பு அறையிலிருந்த தனது வகுப்பை அடை வதற்கு முன் தங்கத்தைப் பற்றிய எண்ணங்கள் அலைமோதின. வாட் எ ஸ்வீட் அண்ட் மிஸ்டீரியஸ் கேர்ல்! இந்த இளைஞர் உலக ஆட்டபாட்டங்களுக்கு அப்பால் கடந்து சென்று விட்ட வளைப் போன்ற சலனம் அற்ற முகம். ஆனல் ஏனோ அந்த விழி களின் ஆழத்தில் சோகம் நிழலாடுகிறது?

'குட்மார்னிங் சார்' என்ற மாணவர்களுக்கு பதில் விஷ் செய்துவிட்டு வகுப்பைத் தொடங்கினர். ஷேக்ஸ்பியரின் துன்பியல் நாடகங்கள் பற்றிப் பொதுவான லெக்சர் ஒன்றைத் தொடங்கினர். மாணவர்களும் ஜேம்சும் அதிலேயே மூழ்கினர்.

வெள்ளிக்கிழமை மாலையில் 'பைன் ஆர்ட்ஸ் மீட்டிங்' முடிந்து வெளியில் வந்துக்கொண்டிருந்தபோது அவரது லெதர் பேக் தவறிக் கீழே விழ பின்னல் வந்துக்கொண்டிருந்த தங்கம் விரைந்து அதை எடுத்துப் பாதரிடம் நீட்டினள். 'தேங்ஸ்' என்ற பாதரைத் தங்கம் கண்களில் பார்த்து 'நோ மென்சன் ப்ளீஸ், இட் ஈஸ் மை டியூட்டி. பாதர்' என்றவாறே மிஸஸ் தெரஸாவுடன் ஆபீசு ரூமுக்குள் சென்றுவிட்டாள். தங்கத்தை முதல் முதல் பார்த்த நிகழ்ச்சி மனத்தில் நிழலாடியது.

கதவைத் தட்டும் ஒலிகேட்டு 'yes come in' என்றார் பாதர். உள்ளே வந்த பியூன் செல்லையா, 'சார் உங்களை பிரின்ஸ்

பால் கூப்பிட்டார்' என்றுன். முதல்வர் அறைக்குள் நுழைந்த பாதரை பிரின்ஸ்பால் அன்புடனும் மதிப்புடனும் நோக்கி, 'பிளீஸ் டேக் யுவர் சீட் சார்' என்ருர். பாதர் 'இதோ மீட் மிஸ் தங்கம், நம்ம டிபார்ட்மென்டுக்கு புதிதாக வந்துள்ள ட்யூட்டர்' தங்கம் இவர்தான் இங்கிலீஷ் டிபார்ட்மென்ட் ஹெட். இந்த காலேஜ் முழுமைக்கும் இவர்தான் பாதர். உனக்கு என்ன உதவியோ, ஆலோசனையோ இவரிடம் தயக்கமின்றிக் கேட்க லாம். நீயே விரைவில் பாதரைப் புரிந்துகொள்வாய்' என்று அறிமுகப்படுத்தினுர்.

'குட் மார்னிங் பாதர்' என்ற தங்கத்தின் குரலைக் கேட்டும் பதில் சொல்லத் தோன்ருமல் அவளையே பார்த்துக்கொண்டிருந் தார். 'ஓ மை குட்னெஸ், ஜேனுக்கு நான் கற்பனை செய் திருந்ததே போன்ற உருவம் இலேசான கருப்பு. இந்தக் காலத்துப் படித்த பெண்களிடம் காணமுடியாத ஒரு உறுதி யுடன் கூடிய மென்மை. இறுக்கமாக மூடியிருந்த இதழ்கள் அவளது உறுதியான அழுத்தமான ஸ்வாபத்தை உணர்த்தி யது. அவள் கண்களில்தான் அவளது உயிர்ப்புத் தன்மையும் தனித்தன்மையும் பளிச்சிட்டு அவளுக்கு அழகு தந்தது. 'என் டார்லிங் மேரிக்குப் பிறந்த குழந்தை மறுவாரமே மரித்துத் தாயோடு கர்த்தரிடம் செல்லாமல் இருந்தால் இப்படித்தான் தங்கத்தின் அளவு வளர்ந்திருக்கும்' பிரின்ஸ்பாலின் குரல் அவரது நினைவோட்டத்திற்குத் திரையிட்டது.

அன்றிலிருந்து தங்கத்திடம் என்ன காரணத்தாலோ ஒரு பிடிப்பும் அன்பும் பாசமும் ஏற்பட்டுவிட்டது பாதருக்கு. தங்கமும் விரைவில் பாதரைப் புரிந்து கொண்டாள். ஆங்கிலத் துறை மட்டுமின்றி அந்தக் கல்லூரி பிரின்ஸ்பால் முதல் பியூன் செல்லையா வரை அனைவரும் பாதரைத் தங்கள்தங்கள் சொந்த பாதராகத்தான் நினைத்தனர். யாருக்கும் எந்தத் துன்பத்திற் கும் சுமைதாங்கிக் கல்லாக பாதர் இருந்தார். தங்கத்துக்கு அவரிடம் மனம்விட்டுப் பேசவேண்டும் என்று விரும்பியும் சந்தர்ப்பம் கிடைக்கவே இல்லை. ஆனுலும் இருவரும் இடை இடையே எப்போதாவது பார்த்துக் கொள்ளும்போது அவர்கள் பரிமாறிக் கொள்ளும் சில சொற்களிலேயே பரஸ்பர அன்பும் மதிப்பும் வெளிப்பட்டன. தங்கத்தின் கண்களில் தன்னைக் கண்டதும் ஏற்படும் பனிப்பும், ஒளியும் தன்னைப்போலவே அவளுக்கும் தன்னிடம் ஒரு பிடிப்பு ஏற்பட்டதை உணர்த்தி யது. 'பாதர்' என்று அவள் அழைக்கும்போதே அந்தக் குரல் அவள் தம் உள்ளுணர்வின் அந்தரங்கங்கள் அனைத் தையும் வெளியிடத் துடிப்பது போல இருக்கும்.

அன்று இரண்டாமாண்டு எஃப் பிரிவுக்கு ஒரு டெஸ்ட் கொடுத்து எழுதச் சொல்லிவிட்டு டிபார்ட்மென்டல் சம்பந்த மான ரெஜிஸ்டர் ஒன்றை புரட்டிக்கொண்டிருந்தார் ஜேம்ஸ். திடுமென ஓடிவந்த ஒரு மாணவன், பாதர் சார், நம்ம புது மிஸ் தங்கம் திடீர்னு ஸ்லூன் ஆயிட்டாங்க' என்றுன். விரைந்தார் பாதர்.

ஸ்டேஜிலேயே படுக்கவைத்திருந்தார்கள் தங்கத்தை. பாதரைக் கண்டதும் மாணவர்களும் சில லெக்சரர்களும்

ஒதுங்கி வழிவிட்டனர். தங்கத்தின் வெளுத்துப்போன முகத்தைப் பார்த்தவாறே 'எப்படி இப்படி' என்றார் பாதர். அருகிலிருந்த ஒரு மாணவன் 'ஒன்றுமில்லை பாதர், இங்கு ஒரு மாணவியின் வீட்டிலிருந்து ஆள் வந்து அவள் அம்மாவுக்கு ரொம்ப சீரியசாக இருப்பதாகச் சொன்னதும் அப்பெண் ஓவென்று அழ ஆரம்பித்துவிட்டாள். அவளை நாங்கள் சமாதானப்படுத்த முயன்றபோதே தடாலெனச் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தால் மிஸ் மயக்கமாக விழுந்துவிட்டிருந்தார்கள்' என்று விளக்கினான்.

'இன்ஜெக்சன் போட்டுவிட்டு நிமிர்ந்த டாக்டர், ஒன்றும் பயமில்லை பாதர். வெறும் மயக்கம்தான். ஏதோ ஷாக் நியூஸ் அவர்களைப் பாதித்திருக்கிறது. ஒரு நாலு நாளைக்கு ஃபுல் ரெஸ்ட் எடுத்துண்டா சரியாப்போயிடும்' என்றார். கண்விழித்த தங்கம் எழுந்திருக்க முயன்றாள். 'நோ, தங்கம் இன்னும் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கங்க. மிஸஸ் மணிசேகரன் ப்ளீஸ் நீங்கள் மிஸ் தங்கத்தை டாக்சியில் அவள் வீட்டில் விட்டுவிட்டு வந்து விடுகிறீர்களா? 'எதற்கு பாதர்' என்று மறுக்க முயன்ற தங்கத்தை பார்வையால் அடக்கி இருவரையும் அனுப்பிவிட்டுத் தன் வகுப்பறைக்குச் சென்றார் பாதர்.

சர்ச்சுக்குப் போய்விட்டு திரும்பி வந்துகொண்டு இருந்த பாதர், 'அண்ணா நகரில்' நுழைந்தார். திடீரென்று அவருக்கு அப்போதுதான் நினைவு வந்தது. 'அட, தங்கம் இங்குதானே இருப்பதாக சொல்லி இருந்தாள். அன்று உடல் நலமில்லாமல் அனுப்பிய பிறகு பார்க்கவே இல்லையே.' அங்கிருந்த பையனிடம் விசாரித்துத் தெரிந்துகொண்டு கோடி வீட்டை நோக்கி நடந்தார்.

வாயிற் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்த பாதரை மரங்களும், செடிகளும், கொடிகளும், மலர்களும் வரவேற்றுத் தங்கத்தின் அழகுணர்ச்சியை சொல்லாமல்சொல்லின. காலிங்பெல் ஒலி கேட்டு வெளியே வந்த ஒரு நடுத்தர வயது அம்மா, பணிவுடன் பாதரை வரவேற்று 'வாங்க ஐயா' என்று உள்ளே கூட்டிச் சென்றாள்.

'மிஸ் தங்கம் இல்லையா? என்றவரை இடைமறித்து', அவர்கள் வழக்கமா பக்கத்துவீட்டு மேஜர் கிழத்துடன் சாயந்தரம் சாயந்தரம் குறிஞ்சி முருகன் கோயிலுக்கு போயிடுவாங்க. இரண்டு பேரும் காலாற நடந்துபோயிட்டு சாமி தரிசனம் பண்ணிட்டு இருட்டறபோதான் திரும்பி வருவாங்க' அவள் பேச்சை இடைமறித்த பாதர், அப்போ தங்கம் கோவிலுக்குப் போயிட்டாளா வீட்டில் இல்லையா? என்றார். 'ஐயோ, மறந்தே போயிட்டேனுங்களே, அம்மா நீங்க தெருக் கோடியில் வரும்போதே பாத்துண்டு இந்தக் கடுதாசியை உங்களிடம் கொடுக்கச் சொல்லிட்டுக் கோயிலுக்குக் கிளம்பிட்டாங்க' என்றவள் ஒரு சிறு துண்டு காகிதத்தைப் பாதரிடம் தந்தாள்.

வியப்புடன் பிரித்தார் பாதர். "ரெஸ்பெக்டட் பாதர், உங்களிடம் முதலில் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் வருவதைப் பார்த்தும் உங்களை வரவேற்காமல் சென்று விட்ட

தற்காக. உங்களிடம் பல நாளாக என்னை உணர்த்திக் கொண்டு ஆறுதல்பெறத் துடிக்கிறேன். ஆனால் துணிவுதான் இல்லை. இன்று நீங்கள் வருவதைப் பார்த்ததும் ஒரு ஐடியா தோன்றியது. ஹாலில் எனது மேஜை டிராயரில் எனது டைரிகள் உள்ளன. இதுவரை காட்டாத அதை உங்களிடம் சமர்ப்பிக்கிறேன். நீங்கள் படித்து முடிக்க அவகாசம் தந்தே போகிறேன். இன்னும் ஒரு மணி நேரத்தில் திரும்பிவிடுவேன்.'' இப்படிக்குத் தங்கம் என்று எழுதியிருந்தது.

'ஐயா காப்பி சாப்பிடுங்க' என்று சொன்ன அந்த அம்மாள் பாதரை ஹாலுக்குள் அழைத்துச்சென்று காப்பி தந்தாள். தங்கம்மா சீக்கிரம் வந்துடறதா சொன்னாங்க. இந்த டிராயரிலே புத்தகம் இருக்காம். உங்களைப் படிக்கிறதுக்கு வேணுமினு எடுத்துக்க சொன்னாங்க' என்றவாறு டிராயரைத் திறந்து டைரி நாலு ஐந்தை எடுத்து மேஜைமீது வைத்தாள்.

'கர்த்தரே' என்றவாறு முதல் டைரியை எடுத்துப் பிரித்தார் பாதர். அதிலே தங்கத்தின் இளம் பிராயப்பருவம் விரிந்தது................

மார்கழிமாதக் கடுங்குளிர். கைகால்களைக் குறுக்கிக்கொண்ட தங்கம், அம்மா முணகலோடு எழுந்திருப்பதைக் கவனித்தாள். வெடவெடவென்று பற்கள் நடுங்கக் கை கால்களும் விரைக்க அவள் சாணிக் குண்டானை எடுத்துக்கொண்டு வாசல்புறம் செல்வதைக் கடைக்கண்ணால் பார்தத தங்கத்துக்கு நெஞ்சைப் பிழிந்து என்னவோ செய்தது. 'முருகா, இந்த வயதான காலத்தில் என் அம்மா வேலைசெய்து துன்பப்பட நான் பார்த்துக்கொண்டு இருக்கும்படி செய்து விட்டாயே இதற்கு முடிவு காலம்தான் எப்போ?

மறுநாள் இரவு முழுவதும் உறங்காமல் தன்னையயர்ந்து உறங்கி விட்டாலும் சட்டென்று விழித்துக்கொள்வதும் பின் மீண்டும் உறங்குவதுமாக இருந்த தங்கம் காலை 5 மணிக்கு அம்மா எழுந்திருப்பதற்கு முன்னால் பள்ளிவாசலில் 4 மணிக்கு ஓதும் ஒலியைக் கேட்டுத் தான் எழுந்துவிட வேண்டும் என்று விழிப்புடன் இருந்த தங்கம் 'அல்லாஹ் அக்பர்' என்ற குரல் கேட்டதுமே மெல்ல எழுந்தாள். பாவம் அம்மா அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தாள. அவள் விழிப்பதற்குள் வாசலுக்கு நீர்தெளித்துச் சாணமிட்டுக் கோலமிட்டுவிடவேண்டும்.

பழக்கமில்லாததால் குளிர்ந்த நீரில் கைபட்டதுமே சிலீரென அக்குளிர்ச்சி எலும்புவரை ஊடுருவிச் சென்றது. இருந்தும் பல்லைக் கடித்துக்கொண்டு வேலையைச் செய்து முடித்தாள். பலன் நாலுமணி நேரத்தில் தெரிந்து விட்டது குளிர்ச்சி சேருமல் ஆஸ்துமா ட்ரபிள் வந்துவிட மூச்சுவிட முடியாமல் துடித்தாள் தங்கம். ஒரு புறம் அத்தையின் கோபமான ஏச்சுக்கள் துளைத்து எடுக்க, அம்மா கைகால் ஓடாமல் கண்ணீருடன் தனக்கு அருகில் துடிப்பதைக்கண்ட தங்கம் அம்மாவின் வேதனைக்குத் தான் காரணமாகிவிட்டோமே எனத் தன்னையே சபித்துக் கொண்டாள்.

'தங்கம் ஏண்டி இப்படி என் மனசை நோகடிக்கறே. நீ கஷ்டப்படறதை பார்த்துட்டு என்னால ஒன்னும் முடியலடி.

ஏண்டி இப்படி பண்ணினே. நான்தான் உழைச்சு ஓடாப் போறதுக்குண்ணே பிறந்த ஜென்மம் இருக்கேன். எப்படியோ செய்யறேன் உனக்குத்தான் குளுந்ததா எதுவும் ஆகவே ஆகாதுண்ணு டாக்டரம்மா சொன்னளே. ஏண்டி நீ நன்ன உடம்பைக் கவுனிச்சிட்டுப் படிச்சியான்னு நம்ம கஷ்டமெல்லாம் கொஞ்ச நாளேக்குத்தானேடி. நீ படிச்சு முடிச்சுட்டு ஏதானும் வேலைக்குப் போயிட்டேயின நான் ராஜாத்தியாட்டமா உக்காந்துக்க மாட்டேனு? கண்களில் கண்ணீர் பொங்க அந்த மெலிந்த கரம் என் நெஞ்சைத் தடவியபோது ' அம்மா அம்மா ' என்று அழத்தான் முடிந்தது என்னல்.

'அடியே தங்கம் நேரமாச்சு. பாத்திரங்களை ஒழிச்சுப் போட்டுட்டு சாப்பிட்டுட்டு விளக்கை அணையேன். மாசம் பொறந்தா கரண்ட் பில் சுளையா முப்பதை எட்டிடுது. தானு ஒரு காசு வருந்திச் சம்பாதிச்சா வருத்தம் தெரியும்' நொடிப்புடன் அத்தை கைக்குழந்தையுடன் படுக்கச் சென்ருள்.

பசி வயிற்றைக் கிள்ளி அபாரமாக ஓலமிட்டது. சமையலறைக்குள் நுழைந்த தங்கம் பாத்திரத்தைத் திறந்து பார்த்தாள். உள்ளம் பொசுக்கென அத்தனை பசியும் அடங்கியது போல இருந்தது. ஒருவருக்குக்கூடப் போதாத அளவு சாதமே அங்கு இருந்தது. மத்தியானத்திலிருந்து பம்பரமாகச் சுழன்று வேலை செய்யும் அம்மாவை நினைத்தவுடன், ஒரு கை சாதம் எடுத்து போட்டுப் பேருக்குச் சாப்பிட முயன்றும் அது தொண்டையில் இறங்க மறுத்தது.

அதற்குள் உள்ளேவந்த அம்மா, என்னடி மோரு போட்டுக்கலையா?' என்ருள். 'எனக்குப் போறும்மா' ஏனடி சாதத்தை வீணுக்கனும், வளர பொண்ணு இப்படியா அணில் கொறிச்ச மாதிரி சாப்பிடறது. படிக்கிறதுக்காவது தெம்பு வேண்டாம். 'சாதத்தை தட்டில் கொட்டினள் அம்மா' 'உனக்கு' ஹீனஸ்வரத்தில் வெளிவந்த என் குரலை அம்மாவின் பலவீனமான குரல் தடுத்தது. ' நான் எப்பவோ சாப்பிட்டாச்சு. ராஜா சாப்பிடமாட்டேனு மிச்சம் வச்சுட்டான். அதோடு போட்டுச் சாப்பிட்டேன். நீ சாப்பிடு.' என்ருள்.

அம்மா சொல்வது முழுப்பொய் என்பது எனக்கு நன்ருகவே புரிந்தது. ஒட்டிய வயிறும் சோர்ந்து களைத்த முகமும் அவள் சாப்பிடவே இல்லை என்பதைச் சொல்லாமல் சொல்லிற்று. இருந்தாலும் நான் சாப்பிடாவிட்டால் என்னைத்தான் சாப்பிட்டுவிட்டேன் என்பதை நம்பச் செய்வதற்காகவாவது மீதி சாதத்தைத் தெருப் பிச்சைக்காரனிடம் கொட்டிவிடுவாள். துக்கம் தொண்டையை அடைக்க அம்மாவுக்குத் தெரியாமல் மறைத்துக்கொண்டு அவள் திருப்திக்காகச் சாப்பிட்டேன்.

லாந்தரை ஏற்றி வைத்துக்கொண்டு மறுநாள் ஆங்கிலத் தேர்வுக்காகப் படிக்கத் தொடங்கினேன். தாகம் எடுக்கவே ஜலம் அருந்தச் சமையலறைக்கு வந்தேன். ஒருக்களித்த கதவுக்குப் பின்னல் சாதம் வடித்த கஞ்சியை டம்ளரில் ஊற்றி மடக்மடக்கென்று குடித்துக்கொண்டிருந்தாள் அம்மா.

படபடக்கும் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு படுக்கைக்குத் திரும்பினேன். 'இன்னும் எத்தனை காலம் இப்படி ஒரு

வரை ஒருவர் ஏமாற்றிக் கொண்டு, ஒருவர் துன்பத்தை மற்றவருக்குக் காட்டாமல் எப்படி எப்படி — எத்தனை காலம்......சட்டென்று புதுயோசனையுடன் நிமிர்ந்து அமர்ந்தேன். இன்னும் இரண்டே இரண்டு ஆண்டுகள் தாமே. அம்மாவின் உடலுழைப்பை என்னால் பகிர்ந்துகொள்ள முடியாது என்றாலும் அவள் வழியில் தனனை வருத்திக்கொண்டு எனக்காக ஓடாகத் தேய்ந்தால் நான் என் வழியில் என்னையே முழுதும் பயன்படுத்திக் கொண்டு மற்றதெல்லாவற்றையும் மறந்துவிட்டு அம்மாவின் துன்பங்களையும் கொஞ்சம் காலத்திற்குக் காணு கண்ணுயத்தான் இருக்கவேண்டும்.

விரைவில் இருவருக்கும் நல்ல முடிவைத் தேடவேண்டும். என் கல்வியின்—உழைப்பின் கனியை என் அம்மாவை நுகரச் செய்ய வேண்டும் என்பதற்காக அன்றிலிருந்து அசுரத்தனமாக என்னை வருத்திக்கொண்டு படிப்பில் மூழ்கினேன். எனக்காக அம்மா பின்னால் உருகுவது எனக்குத் தெரியும். அவளுக்காக நான் துடிப்பதை அவள் அறிவாள். இருந்தும் இருவரும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் மறைத்து வந்தோம். காலம் இப்படியேவா போய்விடும்.

பக்கத்து வீட்டு ராமு ஓடி வந்து, 'அக்கா, உங்க ரிசல்ட் வந்துடுத்து, நீங்க பாஸாம். அப்பா கூட்டிண்டு வரச்சொன்னு' என்றான். அம்மா கைவேலையை விட்டு விட்டு ஓடினாள். நானும் அவள் பின்னுடி ஓடினேன்.

ஷியாமா சாஸ்திரி மாமா, இருவரையும் முறுவலுடன் வரவேற்றார். 'அம்புஜம் நீ அதிர்ஷ்டகாரிடி, உன் பெண் பி. ஏ. பர்ஸ்ட் கிளாசிலே பாஸ் பண்ணிட்டா' என்றார். அம்மா கண்களை மூடிக்கொண்டு 'எல்லாம் மகமாயி ஆசீர்வாதம் வாத்தியாரய்யா என்றாள். மகிழ்ச்சிப் பெருக்குடன் நானே என் கண் கண்ட தெய்வமாகிய அன்னையைக் கண்ணால் பார்த்து மனத்தால் வணங்கினேன்.

பிறகு நடந்ததெல்லாம் கனவா இருக்கு! ஷியாமா சாஸ்திரியோட தங்கையும் அவள் கணவரும் மெட்ராசில் ஒரு சிட்பண்ட் கம்பெனி நடத்திண்டிருந்தா, அதுக்குப் படிச்ச பெண் குறைந்த சம்பளத்துக்கு வேண்டியிருக்குன்னு சாஸ்திரிகளிடம் சொல்லியிருந்தாளாம். அம்மாவிடம் அவர் சொன்னபோது அத்தையின் எதிர்ப்பையும் பாராட்டாது என்னைச் சென்னை கிளம்பச் சொன்னாள் அம்மா. 'பணம்மா' என்று நான் இழுத்தபோது 'அதைப்பற்றி நீயேண்டி கவலைப்படறே மாமாகிட்ட அப்பளாம் வடாம் போட்டுச் சம்பாதித்து சேத்த பணம் கொஞ்சம் இருக்கு வாங்கிண்டு போயிட்டு வா' என்றாள்.

கிளம்பின அன்னைக்கு 'அம்மா உன்னை தனியே இங்க கஷ்டப்பட விட்டுட்டு நானு..... அழுத என்னை அம்மா இதமாக அணைத்துக்கொண்டாள். இதுவரை என் கண்முன்னால் எதற்குமே கலங்காத அம்மா மாலையாய்க் கண்ணீர் விட்டாள்! 'தங்கம், இது நம்ம நல்லதுக்குதாண்டி. சின்ன துளிரா உன்னை அவர் என் மடியிலே போட்டுட்டு நிம்மதியா போயிட்டார். உன்னை இத்தனை பெரியவளா வளர்க்கறதுக்குள் எத்தனையோ கஷ்டப்பட்டாச்சு, இன்னும் ஒரு வருஷமோ ரெண்டு வருஷமோ...... நம்ம கஷ்டமெல்லாம் தீர்ந்துடும். உன்னை

பார்த்தா என் கண்ணே பட்டுடுமோன்னு பயமா இருக்கு. தள தளன்னு கொடியா வளர்ந்திட்டே. நீ கனி கொடுத்து அதை நான் உண்ணும போயிடமாட்டேண்டி' கண்ணீரும் சிரிப்பும் கலந்தது அம்மா குரலில் அம்மாகூட இவ்வளவு பேசுவாளா? ரயிலில் எதிரிலிருந்தவர்கள் உற்றுப்பார்க்க 'சே, இந்த கரி என்னமா கரிக்குது' என்று கண்ணைக் கசக்கிச் சமாளித்தேன்.

முதல் வருடம் பூனு ஆபீசில் வேலைசெய்யும் போதும் சரி, ஈவினிங் காலேஜிக்குப் போகும்போதும் சரி எப்போதும் அம்மாவின் நினைவுதான். இன்னேரம் மாவரைச்சுண்டு இருப்பா. இன்னேரம் தாளிதம் செய்வா.........

சாஸ்திரியோட தங்கை ராஜம் மாமி என்னிடம் எவ் வளவோ அன்பாயிருந்தாள். இரவு பதினேரு மணிக்குமேலே நான் விழிச்சு படிச்சிட்டு இருந்தா 'சித்த தூங்கப்படாதோ' என அங்கலாய்ப்பாள். இதோ படுக்கிறேன் மாமி என அவளை அனுப்பிவிட்டு, மனதுக்குள் 'என் அம்மா இந்நேரம் முதிர்ந்த உடல் தள்ளாட வேலை செஞ்சுண்டு இருப்பா—அவளை நல்லா வச்சுக்கணும்னு நான் இன்னும் அதிகமாக உழைக்கணும். எனக்கென்ன ஓய்வு வேண்டிக் கிடக்கு' சோர்ந்த கண்களைக் கட்டாயமாக விழிக்கச் செய்வேன்.

மாலைக் கல்லூரி பத்மா என்னிடம் அடிக்கடி, 'ஏன் தங்கம் நீங்கமட்டும் கலகலப்போ, ஒரு பிக்சர், டிராமா என்ருே இல் லாமல் இயந்திரமா வேலை செய்கிறீங்க' என்று கேட்கும்போது 'பத்மா உடுக்கவும் உண்ணவும் என்னையொத்த வயதின ரைப் போல மகிழ்ச்சியா துள்ளவும் எனக்கும் காலம் வரும். என் இலட்சியம் கைகூடின பின்தான் எனக்குச் சராசரி பெண் ணின் இன்ப உணர்வுகள்கூட துளிர்க்கும்' என்பேன். என் னைப் புரிந்துகொள்ள முடியாமல் விழிப்பாள் அவள்.

எக்ஸாம் முடிந்தது. நிச்சயம் செகண்ட் கிளாஸ் உறுதி. எங்கள் சிட்டணட் கம்பெனி வாடிக்கையாளரான புரபஸர் சீனிவாசன் நிச்சயம் எனக்கு வேலை வாங்கித் தருவதாக உறுதி கூறினர். அப்பா, எல்லாம் முடிந்துவிட்டது இனி துன்பமில்லை-துன்பமில்லை-துன்பம் என்பது துளியும் இல்லை. என் அம்மாவை எப்படி எல்லாம் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நாளும் நாளும் கற்பனை செய்தேனே அதை நனவாக்கப் போகிறேன். அவளை அசங்காமல், நிம்மதியாக மகிழ்ச்சியாக சந்தோஷமாக திருப்தியாக......வண்டி ஸ்டேசனில் நிற்காவிட்டிருந்தால் என் கற்பனைகளுக்கு முடிவே வந்திருக்காது.

மாமா வந்திருந்தார் ஸ்டேஷனுக்கு, ஆச்சரியம்தான். ம்-இதிலென்ன ஆச்சரியம்–வெட்டிக் கன்ருக இருந்தவரையில் நீர் ஊற்றி தொலைக்கவேண்டி இருக்கிறதே என அலுத்துக் கொண்டார்கள். இனி பணமாகக் காய்த்துக் குலுங்கப் போகி றேனே இல்லையோ உபசரணைக்குக் கேட்பானேன்.

சொரேர் என நெஞ்சிலும் அடிவயிற்றிலும் ஏதோ வேகமாக இறங்கியது. 'மாமா, ஏன், ஏன் இங்கு நிறுத்தறேள்' அலறி விட்டேன் நான். தங்கம் கொஞ்சம் மனசை திடமா வைச்சுக் கம்மா. அக்காவுக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லே,' ரோடு என்றும் பாராமல் அம்மா என்று கத்திவிட்டேன்.

'இதுவா இதுவா என் அம்மா! என் அம்மாவின் கை எலும்பாத்தான் இருக்கும். ஆனு இப்படி கருத்து—வெறைச்சு இருக்காதே, கண்கள் சோர்ந்துதான் இருக்கும். ஆனு இப்படி வெளுத்துப் பூத்துப்போய் இருக்காதே. அம்மா ஒல்லியாத்தான் இருப்பா. ஆனுக்கா இப்படி குச்சியா எலும்புக்கூடா இருக்க மாட்டாளே யந்தரம்போல ஒவ்வொன்ரு தடவித்தடவிப் பார்த்துக்கொண்டே இருந்தேன்.

'தங்கம்' கிணற்றுக்குள் இருந்து மெல்லமாய்க் கூட்பிட்டது போல இருக்கும் அந்தக் குரல் என்னுேட அம்மாவுதேதான்.. அதுவரை பைத்யம்போல பிரமை பிடித்து நின்றவள் அம்மா வின் குரலையும் கடைசியாக அவள் என்னை ஒரிரு விளுடிகள் குத்திட்டதுபோலப் பார்த்த அவள் பார்வையைப் பார்த்தும் ஓவென்று அலறி அவள்மேல் விழுந்தேன்......

எல்லாம் முடிந்துவிட்டது. எல்லாமே முடிந்து விட்டது. சிலமாதங்கள் ...... பல நாட்கள் ..... சூன்யத்தையே உணர்ந் தேன். அம்மா மாவரைப்பதும், சாணம் தெளிப்பதும், தாளிதம் செய்வதும், அப்பளம் இடுவதும் இறுதியாக அவளது குத்திட்ட பார்வையும் ஜில்லிட்ட பாதமும் .....நினைவுகள் அம்மாவைப் பற்றி படர்ந்தனவாகவே இருந்தன.

மற்றவர்களின் வற்புறுத்தலால் வேலைக்குப் போனேன். மாமியின் இன்சொல்லும், உபச்சரணையும், தங்க நகைகளும் பட்டுப் புடவைகளும் .. வரண்ட என் நெஞ்சை மேலும் வரளச்செய்தன. காலம் ஓடியது. நானும் வாழ்கிறேன். என் இதயம் மோனமாக அழுவது நிற்கப்போவதே இல்லையா? ஊனையும் உடலையும் உள்ளத்தையும் அத்தனையையும் அணு அணுவாக யாருக்காகச் சிதைத்து எனக்கு உரமிட்டு வளர்த்த அன்னைக்கு, நானும் என்னை வருத்தி வருத்தி, ஏங்கி ஏங்கி, தவித்து ஈன்ற என் கனிகள் உழைப்பின் விளைவு .... என்னைச் சிறு வயதில்தான் உண்ணுமல் உண்டுவிட்டதாக ஏமாற்றும் அம்மா இன்றும் அது போலவே ஏமாற்றிவிட்டுப் போயே போய்விட்டாள்.

இலக்கியத்தில் மூழ்கினேன். அன்னை போன்ற முதிர்ந்த அனுதைப் பெண்களுக்கு தொண்டு செய்தேன். ஆத்ம விசாரணையில் இறங்கினேன். எதிலும் எனக்கு அமைதிகிட்டவே இல்லை. இந்த சுமையைக் குறைத்து என்னை நல்வழி நடாத்த யாருமே கிடைக்கமாட்டார்களா?......

தங்கத்தின் டைரியை படித்ததும் எனது மனத்தை என்னவோ செய்தது. கண்களில் நீர் துளிரிட்டது. தங்கம் உன் சிறிய வயதில் எத்தனை பெரிய சோகமான அனுபவம்......

'பாதர்' தங்கம் வந்துவிட்டாள். அன்புக்காக, ஆதரவுக்காக, ஆலோசனைக்காக, வழிகாட்டிக்காக, தன் சுமை இறக்க ஏங்கும் ஏக்க விடிவுக்காகத் தவிக்கும் உணர்வுகள் அவள் குரலில் துடித்தன. அருகில் காலடியில் அமர்ந்த தங்கத்தை அன்போடு அவள்தலையை வருடினேன். 'பாதர்' விம்மி வெடித்தாள் அவள். என் மோனமும் அவள் விம்மலும் மட்டுமே அங்குக் கொலுவீற்றிருந்தது.

முத்தொள்ளாயிரம்

இலக்கியச் சோலை — மூன்றும் பேச்சு

பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ்
தமிழ்த்துறைத் தலைவர், தூய சூசையப்பர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

முத்தொள்ளாயிரம் பேச்சு வரிசையில் முதல் இரண்டு உரைகளில் பாண்டியனைப் பற்றிய செய்திகளே பேசப் பெற்றன. இந்தப் பேச்சில் சோழனைப் பற்றிய செய்திகள் புலப் படுத்தப் பெறும்.

